[1974 மார்ச் 21

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்பட்டதன் பேரில், அந்தக் கிராமம் பள்ளியில்லாக் கிராமம் அல்ல என்றும், மேற்படி கிராமத்தில் பள்ளி செல்லும் பிள்ளைகள் 37 பேர்நான் உள்ளனர் என்றும், இன்னும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டிய பள்ளி வயதுப் பிள்ளைகள் 13 பேர் மட்டுமே இருப்பதால் புதிய பள்ளி துவக்க அந்த எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்றும் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கிராமத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பள்ளியும், 1.4 கிலோ மீட்டர் தூரத்தில் மற்றொரு பள்ளியும், 1½ கிலோ மீட்டர் தூரத்தில் மற்றொரு பள்ளியும், ஆக மூன்று பள்ளிகள் நடைபெறுகின்றன. அண்மையில் நடைபெறும் பள்ளிகளுக்குச் செல்ல இயற்கைத் தடை ஏதும் இல்லை. அருகிலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் மேற்படி கிராமத்து பள்ளி வயதுப் பிள்ளைகள் சேர்ந்து படிக்க வாய்ப்பு உள்ளது. இதற்கு அருகே நடைபெறும் பள்ளிகளில் இப்போதுள்ள இடத்தை அதிகப்படுத்தி, மேற்படி கிராமத்தில் இன்னும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டிய பள்ளி வயதுப் பிள்ளைகள் அனைவரையும் அங்கே சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய பள்ளி துவக்க அனுமதி வழங்கினால் போதுமான பிள்ளைகள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்க இயலாது. மேற்படி கிராமத்தில் புதிய பள்ளி துவக்குவதால் அரசுக்கு கூடுதல் செலவினங்களுடன் தேவைக்கும் அதிகமாகக் கல்வி வசதிப் பெருக்கத்தையும் ஏற்படுத்தும்.

Ambikapuram Board High School

* 532 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Hon. Minister for Education has received a petition, dated 27th July 1972 from the Building Committee Members of Board High School, Ambikapuram, Tiruchirappalli regarding the functioning of the school; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) எனினும் இதுபற்றிய புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்ததால் நிலைமை விசாரிக்கப்பட்டு வருகிறது.